தாகவும் வளர்ச்சி வீதத்தில் கூட்டப்பட்ட பெறுமதியான 45 சதவீதமானது 1976 இல் பதிவுசெய்யப்பட்டவற்றில ஆகக் கூடியதாகும்.

கைத்தொழில் உற்பத்தி தொடர்ந்தும் நுகர்வு, இடைநிலைப்பொருட்களையே பெருமளவு உள்ளடக்கி இருந்ததுடன் மொத்தப் பெறுமதியில் ஏறக்குறைய 90 சதவீதத்திற்கு வகைகூறியது. உணவு, குடிபானங்களும் புகையிலையும், துணி வகைகள், அணியும் ஆடைகளும் தோல் உற்பத்திகளும், இரசாயனப்பொருட்கள், பெற்ரோலியம், கரி, இறப்பரும் பிளாத்திக்குப் பொருட்களும் ஆகிய கைத்தொழில் வகுப்புக்கள் மொத்தக் கைத்தொழில் உற்பத்தியில் 80 சதவீதங் கொண்ட உயர்வானதொரு பங்கிற்கு வகைகூறுகின்றன.

இவ்வகைகளில் துணை வகுப்பில் குடிபானங்கள், புகையிலை என்பனவற்றின் தயாரிப்பு வெளியீடு கணிசமானளவு வளர்ச்சியடைந்துள்ளமை கவனிக்கக் கூடியதாகும். பாலும் பால் உற்பத்திகளும், மாவரைத்தலும் சீனி உற்பத்தியும் கணிசமான வருவாயினைக் காட்டிநின்ற அதேவேளையில், சிகரெட் உற்பத்தி எல்லையளவால் வீழ்ச்சியடைந்தது. பெற்ரோலிய உற்பத்தியும் ஓர் சிறிய அதிகரிப்பினைப் பதிவுசெய்துள்ளது.

உடை ஏற்றுமதிகள் ஓர் பெருமளவான அதிகரிப்பினைக் காட்டிய வேளையில், புடவை உற்பத்தியின் பெறுமதியில் ஓர் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டது. எடுத்துக்காட்டாக தேசிய புடவைக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான எல்லா உற்பத்திக் கூறுகளினதும் புடவை வெளியீடு 15 சத வீதத்தால் வீழ்ச்சியுற்றது. இதன்விளைவாக புடவை இறக்குமதிகளின் பெறுமதி 100 சதவீதத்திற்கு மேலானதோர் அதிகரிப்பினைக் கொண்டிருந்தது.

அத்துடன் தாளும் தாள் உற்பத்திகளும்கொண்ட கைத்தொழில் தொகுதியில் பெரும் வீழ்ச்சி பதிவுசெய்யப்பட்டுள்ளது. உற்பத்தியில் ஏற்பட்ட இவ் வீழ்ச்சிக்கு இவ்வாண்டின் ஒரு பகுதியில் வரட்சி நிலைமை காணப்பட்டமையினுல் பதனிடலிற்கு போதிய நீர் கிடைக்கப்பெருமையும், உற்பத்திகள் தயாரிப்பிற்கு இறக்குமதி செய்யப்பட்ட தாளும் தாள் அட்டையும் குறைந்தளவு கிடைக்கக்கூடியதாக இருந்தமையும் ஓரளவு காரணங்களாகும்.

1976இல் கைத்தொழில் துறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்கதோர் போக்கு யாதெனில் யூரியா வளமாக்கிப் பொறியினை நிறுவுவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டமையாகும். இதன் மொத்த மூலதனச்செலவு ரூ. 12,000 இலட்சமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதன் இயலளவு 310,000 தொன்களாகும்.

## விலைகளும் கூலிகளும்

### விலைகள்

நாட்டின் பொதுநுகர்வோர் விலைமட்டத்தினை எடுத்துக்காட்டும் ஒரே குறிகாட்டியான கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டி, 1974இன் 12.3 சதவீதத்திற்கும், 1975இன் 6.7 சதவீத அதிகரிப்புக்களுக்கெதிராக 1976இல் 1.2 சதவீதத்தால் அதிகரித்தது. உள்ளடக்க விலைக்குறிகாட்டியின்படி[1] நடப்பாண்டில் விலை அதிகரிப்பு 6.6 சதவீதமாக இருந்தது.

---

1. நிலையான (1959) விலைகளில் மொத்த தேசிய உற்பத்திக்கு, நடைமுறை விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தியின் விகிதம் என்பதே உள்ளடக்கவிலைக்குறிகாட்டியாகும்.

පුස්තකාලය,
ශ්‍රී ලංකා විශ්ව විද්‍යාලය,
කටුබැද්ද මණ්ඩපය,
මොරටුව.

உணவுத் தொகுதியில் 1.1 சதவீதம் அளவினைக் கொண்ட விலைவீழ்ச்சியினதும் உடை 1.7 சதவீதம் எரிபொருளும் வெளிச்சமும் 11.9, சதவீதம், பல்வகைத் தொகுதிகள் 6.2 சதவீதம் ஆகியவற்றின் அதிகரிப்புகளினதும் தேறிய விளைவே இவ்வாண்டின் கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியில் 1.2 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டதற்குக் காரணமாகும். ஏனைய உணவு விடயங்களில் ஏற்பட்ட விலை அதிகரிப்புகளை எதிரீடு செய்யும்முறையில், மாவின் விலை இருத்தலுக்கு ரூ. 1.10இலிருந்து ரூ. 0.80 ஆகவும், பாணின் விலை இருத்தலுக்கு 0.98 இலிருந்து 0.75 சதமாகவும் குறைக்கப்பட்டதுடன் மாதாந்தப் பங்கீட்டுச் சீனி, இருத்தல் 0.72 சதமாகவும் உதவுதொகை விலைப்படி தலைக்கு $\frac{3}{4}$ இருத்தலிலிருந்து 1 இருத்தல் ஆக அதிகரிக்கப்பட்டது. விறகின் விலை அதிகரிப்பே எரிபொருளுக்கும் வெளிச்சத்திற்குமான குறிகாட்டியின் பெரிய அளவான அதிகரிப்பிற்குரிய முக்கிய காரணமாகும். பல்வகைத் தொகுதியின் விலை அதிகரிப்பிற்கு புகையிலை, குடிவகை என்பவற்றின் மீதான மதுத்தீர்வைகளின் அதிகரிப்பே காரணமாகும்.

பரந்தளவில் பயன்படுத்தப்பட்ட நுகர்வுப்பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்காக பங்கிடலும் விலைக்கட்டுப்பாடும் தொடர்ந்து அரசின் ஒரு வழிமுறையாக இருந்தது. தேசிய பாற்சபை உற்பத்திகளையும் அடிக்கடி பாவனையிலுள்ள மோட்டார் உறுப்புக்களையும்கொண்ட 26 தொகுதி பொருட்கள் 1976இல் முதற்றடவையாக விலைக்கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டன. உற்பத்தியாளர்கள் உண்மையான வருவாயினைப் பெறமுடியாதவாறு நிரம்பல்களை வெளிப்படையாக தடுக்கும் முறையில் கட்டுப்பாட்டு விலைகள் நிலவிய வேளைகளில் விலைகள் அவர்களுக்குச் சார்பாக மேல் நோக்கித் திருத்தப்பட்டன.

**கூலிகள்**

அண்மை ஆண்டுகளில் விலைகளின் ஏற்றங்களால் ஏற்பட்ட பாதிப்பினைத் தணிக்கும் வகையில் அரச துறை ஊழியர்களினதும், கூலி நிர்ணயச்சபைக்கு உட்பட்ட ஊழியர்களினதும் சம்பளங்களும் கூலிகளும் திருத்தியமைக்கப்பட்டன அல்லது திருத்தும்படி பணிக்கப்பட்டன. வரவுசெலவுத்திட்ட எடுத்துரைப்புக்கு ஏற்ப அரச ஊழியர்களின் சிறப்புப் படிகள் 1976 சனவரியில் இருந்து மாதத்திற்கு ரூ. 15 ஆல் அதிகரிக்கப்பட்டன. இவ்வதிகரிப்பு அரச பள்ளிக்கூட ஆசிரியர்கள், அரசுசார் துறை (அரச கூட்டுத்தாபனங்கள். பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிலையங்கள், நியதிச்சபைகள் போன்ற) ஊழியர்கட்கும், கூலி நிர்ணயச்சபைக்குட்பட்ட ஊழியர்கட்கும் வழங்கப்பட்டது. பெருந்தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தளவில் நாளாந்த சம்பள வீதம், தொழிலின் தன்மை, வேலை செய்த நாட்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் விகிதாசார அதிகரிப்பு வழங்கப்பட்டது. வாழ்க்கைச்செலவுக் குறிகாட்டியிலிருந்து வாழ்க்கைச் செலவுப் படி வேறுபடுகின்ற வேளையில் 25 பேருக்குக் குறைவான ஊழியரைக்கொண்ட சிறிய நிறுவனங்களும், ஒப்புதலளிக்கப்பட்ட அறநிலையங்களும் நீங்கலாக ஏனைய தனியார்துறைத் தொழில் தருநர்கள் சட்டப்படி இம்மேலதிகப்படியினை வழங்குதல்வேண்டும்.

1976இல் மத்திய அரச ஊழியர்களின் (அரச பள்ளிக்கூட ஆசிரியர்கள் நீங்கலாக) ஆகக்குறைந்த கூலிவீதம் 5.8 சதவீதத்தினுல் உயர்வடைந்தது. அரச பணியில் உள்ள சிற்றூழியர்கள் அவர்களது ஆகக்குறைந்த கூலிகளில் 6.5 சதவீதங்கொண்ட ஓர் அதிகரிப்பினைப் பெற்ற இதேவேளையில் தொழில்நுட்ப, எழுதுவினைஞர் தரங்களிலுள்ளோர் 4,8 சதவீத அதிகரிப்பினைப் பெற்

25785

றனர். அரச பள்ளிக்கூட ஆசிரியர்களைப் பொறுத்தளவில் ஆகக்குறைந்த கூலிகளின் அதிகரிப்பு 5 7 சதவீதமாகவிருந்தது. தனியார்துறையில் கூலிகளின் சதவீத அதிகரிப்பு ஓரளவு குறைவாகவிருந்தது. பெருந்தோட்டங்களில் தொழிலாளர்களது பெயரளவிலான கூலிகள் 2.16 சதவீதத்தால் அதிகரித்தவேளையில் கைத்தொழில்களிலும் வர்த்தகத்திலுமுள்ள தொழிலாளர்களது கூலிகள் 2.58 சதவீதத்தினல் அதிகரித்தன. இவ்வாண்டில் நம்பத்தக்க நுகர்வோர் விலைக் குறிகாட்டி அற்றநிலையில், உண்மைக்கூலிகளின் மாற்றங்களினை மதிப்பிட முடியாமலுள்ளது. உள்ளடக்க விலைக்குறிகாட்டி ஒரு எடுத்துக்காட்டாக அமையின் 1976இல் உண்மைக்கூலிவீதங்கள் பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளன என்றே கூறல்வேண்டும்.

## தொழில் நிலை

இலங்கையில், தொழில்நிலையும் தொழில் இன்மையும் மீதான எல்லாவற்றையும் உள்ளடக்கிய புள்ளிவிபரங்கள் குடிமதிப்பிலிருந்தும் ஒழுங்கற்ற இடைவெளிகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடாத்தப்பட்ட அளவீடுகளில் இருந்தும் பெறப்படுகின்றன. இவ்வளவீடுகளுள் பலவற்றில் தொழில் பற்றி பெற்ற தரவுகள் தற்செயலானவையாகும். இம்மூலங்களிலிருந்து பெறப்பட்ட தரவுகள் பற்றிய வரையறை வேறுபடுவதனுல் இவற்றைச் சரியான முறையில் ஒப்பிடமுடியாது மேலும், அவ்வாறுன தரவுகள் தொடர்ச்சியான அவதானிப்புக்களுக்கு உட்படும்முறையில் அடிக்கடி பெறக்கூடிய நிலையில் இல்லை. எனவே தொழில்பற்றியும், தொழில் இன்மை பற்றியதுமான 1976இன் போக்குகள் பொதுவானநிலையில் மட்டுமே ஆராயத்தக்கதாக உள்ளன. வேலையின்மையைப் பொறுத்தளவில், அதன் அளவு தெளிவாகத் தெரிவதனுல், அதன் மதிப்பீடுகளை ஒட்டி ஏற்படும் தவறுகள் அதன் அடிப்படைப் போக்கினை மாற்றப்போவதில்லை.

1971இன் குடிமதிப்புத்தரவில், முதலெடுப்பாக 10சதவீத மாதிரிக்கணிப்பினை எடுத்துப்பார்க்கின் 44 இலட்சம் ஆட்களைக்கொண்ட ஒரு தொழிற்படை உள்ளதென்பது தெரியவருகிறது 1973இன் முற்பகுதியில் மத்திய வங்கியினுல் நடாத்தப்பட்ட நுகர்வோர் நிதி அளவீட்டின்படி மதிப்பிடப்பட்ட தொழிற்படை இவ்வெண்தொகையினைவிட ஓரளவே அதிகமானதாகக் காணப்பட்டது. அதேவேளையில் குடிமதிப்புக் கணிப்பின்படி 1971இல் வேலையற்ருேர் எண்ணிக்கை 8 இலட்சமாகவும், 1973க்கான நுகர்வு நிதி மதிப்பீட்டின்படி 10 இலட்சமாகவும் இருந்தது. குடித்தொகையின் வயது அமைப்பையும் வயதுப்படியான தொழிற்பாட்டு வீதங்களையும் எடுத்துநோக்கின் 1976இல் தொழிற்படையில் ஏறக்குறைய 125,000 இளைஞர்கள் சேர்ந்திருக்கையில் ஏறக்குறைய 20,000 பேர் விட்டுவிலகியுள்ளனர் என்பதனை எடுத்துக்காட்டுகிறது. இவ்வெண்தொகைகள் 100,000க்கு மேற்பட்ட புதிய தொழிலுக்கான கேள்வியை உள்ளடக்கத்தக்கதாக இருந்தன.

அரசதுறையின் தொழில்பற்றிய வங்கியினது 1976இன் ஆண்டு அளவீட்டுப்படி அரச திணைக்களங்களிலுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை 4.6 சதவீதத்தால் அல்லது ஏறக்குறைய 20,000 பேர்களால் அதிகரித்துள்ளது. அரசினுல் உருவாக்கப்பட்ட புதிய தொழில்களில் அரைவாசிக்கு சிறிது மேற்பட்ட தொகை ஆசிரியத்தொழிலிலேயே அமைந்திருந்தது. அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தில் ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையே அரசுசார் நிறுவனங்களில் (அரச கூட்டுத்தாபனங்கள் பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறு

25785